

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.7.2025) சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற தமிழ்நாட்டின் புத்தமை (IN2TN) அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டினையொட்டி அமைக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப கண்காட்சியில், காட்சிப்படுத்தப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற ஆழ்நிலை கண்டுபிடிப்புகள் அடங்கிய அரங்குகளை பார்வையிட்டு, ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மாநிலத் திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னித், , ஐடிஎன்டி மையத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமதி வனிதா வேணுகோபால், தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (NRDC) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் (ஓய்வு) கமாண்டர் அமித்ரஸ்தோகி, ஜெட்வொர்க்கின் எலக்ட்ரானிக்ஸ் தலைவர் ஜோஷ் ஃபோல்கர், ஐஐடி மெட்ராஸ் ஆராய்ச்சி பூங்காவின் குழு தலைமைச் செயல் அலுவலர் நடராஜன் மல்லுப்பிள்ளை, அஸ்ட்ராஜெனெகா இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவர் சிவகுமார் பத்மநாபன், மற்றும் ஆராய்ச்சியாளர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உடனிருந்தனர்.

## காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 42 வது கூட்டம்



காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் எஸ்.கே.ஹல்தார் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (30.07.2025) புதுதில்லியில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 42 வது கூட்டம் நடைபெற்றது. சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக நீர்வளத் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், காவிரி தொழில் நுட்பக் குழுமம் மற்றும் பன் மாநில நதி நீர்ப் பிரிவின் தலைவர் இரா.சுப்பிரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மூன்று மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று

# கீழ்பவானியிலிருந்து முன்கூட்டியே தண்ணீர் திறப்பு!

## முதல்வருக்கு ஈரோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் நன்றி!

ஈரோடு, ஆக.1–

ஈரோடு மாவட்டம், கீழ்பவானிப் பாசன நிலங்களுக்கு முன்கூட்டியே தண்ணீர் திறக்க வேண்டும் என்ற விவசாயி களின கோரிக்கையை ஏற்று ஜூலை 31 அன்று திறந்து விடப்பட்டது. இதற்கு ஈரோடு கரூர் திருப்பூர் மாவட்ட கீழ்பவானி பாசன விவசாயிகள் சார்பாக ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்



ஈரோடு, கரூர், திருப்பூர் மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையான கீழ்பவானி அணை தனது அணை தனது முழு கொள்ளளவை எட்டியதால் சுமார் 30,000 கன அடி நீர் காவிரி ஆற்றில் வீணாக கலப்பதால் பொதுமக்கள் விவசாயிகள் எல்.பி.பி. அணையை உடனடியாக வருகிற ஆகஸ்ட் 1 தேதி திறக்க வேண்டும் என்று ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கோரிக்கை வைத்தார்.

1,03,500 ஏக்கர் பாசனம் பெறும் எல்பிபி அணையை கடந்த பல ஆண்டுகளாக ஆகஸ்ட் 15ஆம் தேதி திறக்கப்பட்டு கொண்டிருக்கும் எல்பிபி அணையை பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மேற்கு மண்டல பொறுப்பாளர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அவர்களிடம் இந்த தகவலை தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன் ஜூலை 31 அன்று மாலை 6 மணிக்கு திறக்க உடனடியாக துரித நடவடிக்கை எடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களுக்கும், செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கும் ஈரோடு கரூர் திருப்பூர் மாவட்ட விவசாயிகள் விவசாயிகள் சார்பாக ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் நன்றி தெரிவித்துள்ளார்.

# நாகப்பட்டினம் 4 வது ஆண்டு 11 நாள் புத்தக திருவிழா இன்று தொடங்குகிறது!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து சிறப்புரை! என்.கௌதமன் முன்னிலை!

நாகை, ஆக.1–

நாகை மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்கம், மாவட்ட கல்வி தன்முனைப்புத் திட்டம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் மதிப்பாளர்கள் சங்கம் இணைந்து நாகையில் நாகப்பட்டினம் 4 வது ஆண்டு புத்தகத் திருவிழா இன்று (1.8.2025) தொடங்கி வரும் 11.8.2025 வரை 11 நாட்கள் நடைபெறுகிறது.

நாகப்பட்டினம் 4 வது ஆண்டு புத்தக திருவிழா தொக்க விழா இன்று (1.8.2025) மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது. புத்தக திருவிழா தொடக்க விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் தலைமை தாங்குகிறார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன், நாகை நடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், நாகை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கே.ஸ்ருதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சு.செல்வகுமார், மாவட்ட வன உயிரினக் காப்பாளர் பார்கவதேஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மாவட்ட வருவாய் அலுவலர் வ.பவணந்தி வரவேற்கிறார். நாகப்பட்டினம் 4ம் ஆண்டு புத்தகத் திருவிழாவை பள்ளிக் கல்வி துறை அமைச்சரும், மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.


## தி.மு.க. இளைஞர் அணி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.08.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | தூத்துக்குடி தெற்கு | சத்யா மஹால், புதுக்கோட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–2–இல் ஆவடி, மண்டலம்–9–இல் ஒட்டப்பிடாரம், திருச்செந்தூர் மற்றும் திருவைகுண்டம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 03.08.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | ஆவடி | ஜெய் கிரீஷ் திருமண மண்டபம், தண்டுரை, பட்டாபிராம், திருவள்ளூர். |
| 09.08.2025 சனிக்கிழமை | மாலை 3.00 மணி | ஒட்டப்பிடாரம் | சத்யா மஹால், புதுக்கோட்டை. |
| 10.08.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | திருச்செந்தூர் | ஐ.எம்.ஏ. மஹால், திருச்செந்தூர். |
| | மாலை 3.00 மணி | திருவைகுண்டம் | மல்லிகை மஹால், ஆத்தூரான்கால். |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 30.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஒன்றியம், அடிவள்ளி சுயஉதவிக் குழு கட்டத்தில் நடைபெற்று வரும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தாட்கோ சார்பில் தூய்மைப்பணியாளர் நலவாரியத்தின் கீழ் அடுக்குமாடி குடியிருப்புக்கான ஆணையினை தூய்மைப்பணியாருக்கு வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநராட்சி 4 ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் அடிவள்ளி முரளி, அணிக்கடவு ச.கிரி உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

